

விருதுநகர் மாவட்டம், மல்லாங்கிணறில் உள்ள தி.மு.க. அலுவலகத்தில் தே.மு.தி.க. விருதுநகர் கிழக்கு மாவட்டச் செயலாளர் ராமர்பாண்டி, தே.மு.தி.க. கட்சி நிர்வாகிகளும் வடக்கு மாவட்டச் செயலாளரும், நிதி அமைச்சருமான தங்கம் தென்னரசுவை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தனர். தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க. ஸ்டாலின் கரங்களை வலுப்படுத்தி மீண்டும் கழக ஆட்சி அமைந்திட அனைத்து ஆக்கப் பணிகளையும் முனைப்புடன் செய்வது குறித்த செயல்திட்டங்கள் குறித்தும் விவாதித்தனர்.

# தேர்தல் பணிகளில் முழு கவனம் செலுத்திட SPOC-BDA-SBDA பட்டியல் விரைந்து தயாராகட்டும்!

DMK IT WING

## தகவல் தொழில்நுட்ப அணி நிர்வாகிகளுக்கு அமைச்சர் முனைவர் டி.ஆர்.பி.ராஜா வேண்டுகோள்!

2026 சட்டமன்றத் தேர்தல் களத்தில் தகவல் தொழில்நுட்ப அணி சார்பாக தொகுதிக்கு ஒரு IT Wing SPOC (Single Point Of Contact) தேர்வு செய்து அவர்களின் விபரங்களை IT Wing தலைமை அலுவலகத்தில் கொடுக்க வேண்டும். அவரவர் வாக்குச்சாவடிக்கு உட்பட்ட பூத் டிஜிட்டல் ஏஜென்ட்கள் (BDA) மற்றும் வாக்கு மைய டிஜிட்டல் ஏஜென்டுகள் Station Booth Digital Agent (SBDA) களைப் பட்டியலிட்டு HR team இடம் அளிக்க வேண்டும்.

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை 18.
நாள் :21.03.2026

**முனைவர் டி.ஆர்.பி.ராஜா**
செயலாளர்
தி.மு.க. தகவல் தொழில் நுட்ப அணி

## முத்தமிழறிஞர் கலைஞரின் செயலாளர் கோ.சண்முகநாதனின் மாமியார்-

# காரைக்குடி லெ.வெங்கடாசலம் தாயார் திருமதி தேனம்மாள் மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி



காரைக்குடி, மார்ச் 23-

தலைவர் கலைஞர் அவர்களின் செயலாளர் நினைவில் வாழும் கோ.சண்முகநாதன் அவர்களின் மாமியாரும், திருமதி எஸ். யோகம் சண்முகநாதன், மாநில தி.மு.க. இலக்கிய அணி துணைச் செயலாளர் முன்னாள் நகர செயலாளருமான காரைக்குடி லெ. வெங்கடாசலம் ஆகியோரின் தாயாருமான திருமதி தேனம்மாள் அவர்கள் நேற்று முன்தினம் (21.03.2026 - சனிக்கிழமை) இரவு 10.20 மணியளவில் இயற்கை எய்தினார்கள் என்பதை அறிவிக்க பெரிதும் வருந்துகிறோம்.

அன்னாரின் மறைவு செய்தி அறிந்ததும் கழகத்தினர் ஏராளமானோர் அன்னாரது உடலுக்கு மலர் மாலை வைத்து அஞ்சலி செலுத்தினர்.

அன்னாரின் இறுதி ஊர்வலம் நேற்று (22.03.2026- ஞாயிற்றுக்கிழமை) மாலை 5 மணியளவில் காரைக்குடி, கழனிவாசலில் உள்ள அன்னாரது இல்லத்தில் இருந்து புறப்பட்டு அங்குள்ள இடுகாட்டில் இறுதிச் சடங்குகள் நடைபெற்றன.

## சட்டப்பேரவைத் தேர்தல்:

# வாக்காளர்கள் அடையாளத்தை மெய்ப்பிக்க வழிமுறைகள்!

## இந்திய தேர்தல் ஆணையம் அறிவிப்பு!

புதுடெல்லி, மார்ச் 23-

23.04.2026 அன்று நடைபெறவுள்ள தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தலில் வாக்காளர்கள் தங்களுடைய அடையாளத்தை மெய்ப்பிப்பது குறித்த இந்திய தேர்தல் ஆணையத்தின் ஆணை.

இந்திய தேர்தல் ஆணையம், புதுடெல்லியின் 15.03. 2026-ஆம் நாளிட்ட கீழ்க்காணும் அறிவிக்கை மறுவெளியீடு செய்யப்படுகிறது:-

1.உண்மையான வாக்காளர்கள் 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவ சட்டத்தின் 62-ஆம் பிரிவின் கீழ் அவர்களுடைய உரிமையை மிகவும் பயனுள்ள முறையில் பயன்படுத்துவதற்காக, வாக்காளர்கள், ஆள்மாறாட்டம் செய்யப்படுவதைத் தடுக்கிற நோக்கத்துடன், 1951-ஆம் ஆண்டு மக்கள் பிரதி நிதித்துவச்சட்டத்தின் 61-ஆம் பிரிவு வழிவகை செய்துள்ளதால், வாக்குப்பதிவின்போது, வாக்காளர்கள் தங்களுடைய அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஒரு வழியாக வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையைப் பயன்படுத்துவதற்காக அச்சட்டத்தின் கீழ் விதிகள் மூலம் வழிவகைகள் செய்யப்பட்டுள்ளதாலும்; மற்றும்

2.வாக்குப்பதிவு நடைபெறுகிறபோது, வாக்காளர்கள் ஆள்மாறாட்டம் செய்யப்படுவதைத் தவிர்ப்பதற்காகவும், அவர்களுடைய அடையாளத்தை உறுதி செய்ய உதவுவதற்காகவும் அரசின் செலவில் வாக்காளர்களின் புகைப்படங்கள் அடங்கிய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை, வாக்காளர்களுக்கு வழங்குமாறு உத்தரவிடுவதற்கு, 1960-ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு விதிகளின் 28-ஆம் விதி தேர்தல் ஆணையத்திற்கு அதிகாரமளித்துள்ளதாலும்; மற்றும்

3. 1961-ஆம் ஆண்டு தேர்தல் நடத்தை விதிகளின் 49H (3) மற்றும் 49K (2) (b) ஆகிய விதிகள், 1960-ஆம் ஆண்டு வாக்காளர் பதிவு விதிகளின் 28-ஆம் விதியின் மேற்சொன்ன விதித்துறைகளின் கீழ், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள தொகுதி ஒன்றின் வாக்காளர்கள், வாக்குச்சாவடியில், தங்களுடைய வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க வேண்டும். அந்த வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அவர்கள் அறிக்கத் தவறுகிற அல்லது அளிக்க மறுக்கிற நேர்வில், அவர்கள் வாக்களிக்க அனுமதி மறுக்கப்படலாம் என்பதாலும், மற்றும்

4. மேற்சொன்ன சட்டம் மற்றும் விதிகளின் மேற்சொன்ன விதித்துறைகளை ஒருங்கிணைந்த முறையிலும் ஒத்திசைவான முறையிலும் படிக்கிறபோது, வாக்காளர் பட்டியலில் பெயர் இருப்பதன் மூலம் வாக்களிப்பதற்கான உரிமை எழுகிறபோதிலும், வாக்குப்பதிவின்போது வாக்காளர்கள் தங்களுடைய அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான ஒரு வழியாக அரசின் செலவில் தேர்தல் ஆணையம் வழங்குகிற வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை பயன்படுத்தப்படுவதையும் அது சார்ந்திருக்கிறது என்பது தெளிவாகிறது. மேலும், அவையிரண்டும் ஒன்றாகப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதாலும்; மற்றும்

5.காலவரையறை நிர்ணயிக்கப்பட்ட திட்டம் ஒன்றின்படி, அனைத்து வாக்காளர்களுக்கும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டும் என்று தேர்தல் ஆணையம் 28.08.1993 அன்று ஆணை ஒன்றை வெளியிட்டுள்ளதாலும்; மற்றும்

6. நமது நாட்டில் பதிவு செய்யப்பட்ட தோராயமாக 100% வாக்காளர்களுக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளதாலும் மற்றும்

7.எனவே தற்போது தொடர்புடைய அனைத்து காரணங்களையும், சட்டப்பூர்வ மற்றும் உண்மையான நிலையையும் கணக்கில் எடுத்துக்கொண்ட பின்னர். நடைபெறவிருக்கின்ற பாராளுமன்ற பொதுத் தேர்தல், பாராளுமன்ற பொதுத் தேர்தலுடன் நடைபெறவுள்ள சட்டமன்றப் பேரவைகளுக்கான பொதுத் தேர்தல் மற்றும் சட்டமன்றப் பேரவைகளுக்கான இடைத் தேர்தலில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ள அனைத்து வாக்காளர்களும், அவர்கள் வாக்களிப்பதற்கு முன்னர், வாக்குச்சாவடியில் தங்கள் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்கான வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்கவேண்டும் என இதனால் உத்தரவிடுகிறது. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையை அளிக்க இயலாத அத்தகைய வாக்காளர்கள், அவர்களின் அடையாளத்தை மெய்ப்பிப்பதற்காக, பின்வரும் மாற்று புகைப்பட அடையாள ஆவணங்களில் ஏதேனுமொன்றை அளிக்க வேண்டும்.

(1)ஆதார் அட்டை;

(ii)மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்புத் திட்டத்தின் பணி அடையாள அட்டை;

(iii)புகைப்படத்துடன் கூடிய வங்கி/அஞ்சலக கணக்குப் புத்தகங்கள்;

(iv)தொழிலாளர் நல அமைச்சகத் திட்டத்தின்கீழ் வழங்கப்பட்ட மருத்துவ காப்பீட்டு அட்டை/ஆயுஷ்மான் பாரத் மருத்துவ காப்பீட்டு அட்டை;

(v)ஓட்டுநர் உரிமம்;

(vi)வருமான வரி நிரந்தர கணக்கு எண் அட்டை (PAN Card);

(vii)தேசிய மக்கள் தொகை பதிவேட்டின்கீழ் இந்திய தலைமைப் பதிவாளரால் வழங்கப்பட்ட திறனட்டை;

(viii)இந்திய கடவுச்சீட்டு;

(ix)புகைப்படத்துடன் கூடிய ஓய்வூதிய ஆவணம்;;

(x)மத்திய/மாநில அரசுகள்/பொதுத் துறை நிறுவனங்கள்/வரையறுக்கப்பட்ட பொது நிறுவனங்களின் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட புகைப்படத்துடன் கூடிய பணி அடையாள அட்டைகள்:;

(xi)பாரளுமன்ற/சட்டமன்ற/சட்ட மேலவை உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை மற்றும்

(xii) இந்திய அரசின் சமூக நீதி மற்றும் அதிகாரமளித்தல் அமைச்சகத்தால் வழங்கப்பட்ட இயலாமைக்கான தனித்துவமான அடையாள அட்டை.

8. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையால் வாக்காளரின் அடையாளம் மெய்ப்பிக்கப்படுகின்றபோது, வாக்காளர் புகைப்பட அடையாள அட்டையிலுள்ள அச்சுப்பிழைகள்/எழுத்துப் பிழைகள் முதலியவற்றை பொருட்படுத்த தேவையில்லை. மற்றொரு சட்டமன்ற தொகுதியின் வாக்காளர் பதிவு அதிகாரியால் வழங்கப்பட்டுள்ள வாக்களார் புகைப்பட அடையாள அட்டையை, வாக்காளர் ஒருவர் அளிப்பாராயின், அந்த வாக்காளர் வாக்களிப்பதற்காக வந்துள்ள வாக்குச்சாவடியில் வாக்காளர் பட்டியலில் அவரின் பெயர் இடம் பெற்றிருக்குமாயின், அத்தகைய வாக்காளர் புகைப்பட அட்டைகளையும் ஏற்றுக் கொள்ளலாம். புகைப்படம் பொருந்தாததால் வாக்களரின் அடையாளத்தை மெய்ப்பிக்க இயலாத நேர்வில். வாக்காளர், மேலே பத்தி 7-இல் குறிப்பிடப்பட்டுள்ள மாற்று புகைப்பட ஆவணங்களில் ஏதேனும் ஒன்றை அளிக்க வேண்டும்.

9. மேலே பத்தி 7ல் என்ன கூறியிருப்பினும், 1950-ஆம் ஆண்டு மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் பிரிவு 20A- இன்கீழ் பதிவு பெற்றுள்ள வெளிநாடு வாழ் இந்தியர்கள். அவர்களின் கடவுச்சீட்டிலுள்ள விவரங்களை அடிப்படையாகக் கொண்டு, அவர்களின் அசல் கடவுச்சீட்டின் அடிப்படையில் மட்டுமே (வேறெந்த அடையாள ஆவணமும் அல்லாது) அவர்களின் அடையாளம் வாக்குச்சாவடியில் மெய்ப்பிக்கப்பட வேண்டும்.

இவ்வாறு தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

## தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத்தேர்தல் – 2026

# தி.மு.க. வேட்பாளர்கள் நேர்காணல்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தமிழ்நாடு – புதுச்சேரி சட்டப்பேரவை பொதுத் தேர்தலுக்குப் போட்டியிட விரும்பி தலைமைக் கழகத்திற்கு விண்ணப்பம் செலுத்தியவர்களை கழகத் தலைவர் அவர்கள் 17–03–2026 முதல் 23–03–2026ஆம் தேதி வரை, பின்வரும் மாவட்ட வாரியாக சென்னை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் நேர்காணல் வாயிலாகச் சந்தித்து தொகுதி நிலவரம் வெற்றி வாய்ப்புகள் குறித்து ஆராய்ந்து அறிந்து வருகிறார்கள்.

குறிப்பிட்டுள்ள தேதிகளில் குறிப்பிடப்பட்டுள்ள மாவட்டத்தைச் சேர்ந்த மாவட்டக் கழகச் செயலாளர் மட்டும் வரவேண்டும். மாவட்டக் கழக நிர்வாகிகள் மற்றும் ஒன்றிய, நகர, பகுதிக் கழகச் செயலாளர்கள் வரவேண்டிய அவசியமில்லை. வேட்பாளர்கள் தங்களுக்கான ஆதரவாளர்களையோ, பரிந்துரை யாளர்களையோ அழைத்து வரக்கூடாது என்றும், அவர்களையும் 'அவர்களுக்காக விருப்ப மனு' செலுத்தியோரையும் நேர்காணலுக்கு கண்டிப்பாக அனுமதிக்க இயலாது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

### மாவட்ட வாரியாக நேர்காணல் நடைபெறும் நாள் விவரம்

| நாள் – கிழமை | நேரம் | மாவட்டம் |
|---|---|---|
| மார்ச் 23 திங்கள் | காலை 9.00 மணி | திருச்சி வடக்கு, திருச்சி மத்திய,திருச்சி தெற்கு, தஞ்சை வடக்கு, தஞ்சை தெற்கு, தஞ்சை மத்திய, பெரம்பலூர், அரியலூர் |
| மார்ச் 23 திங்கள் | மாலை 4.00 மணி | புதுக்கோட்டை வடக்கு, புதுக்கோட்டை தெற்கு, கடலூர் மேற்கு, மயிலாடுதுறை நாகப்பட்டினம், திருவாரூர் |

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

## புதுமைப்பெண், தமிழ்ப்புதல்வன் திட்டத்தின் கீழ்

# நீலகிரி மாவட்டத்தில் 8 ஆயிரம் பேர் பயன்!

## முதல்வருக்கு நன்றி கூறும் மாணவ, மாணவிகள்!

உதகை, மார்ச் 23-

புதுமைப்பெண் மற்றும் தமிழ்ப் புதல்வன் திட்டத்தின் கீழ் நீலகிரி மாவட்டத்தில் 8 ஆயிரம் மாணவ, மாணவிகள் பயனடைந்துள்ளனர். அவர்கள் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

தமிழ்நாடு முதல்வர் மு.க. ஸ்டாலின் அனைத்து துறைகளின் வாயிலாக பொதுமக்கள் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து கடந்த 5 ஆண்டுகளில் சிறப்பான முறையில் செயல்படுத்தி வருகிறார்.

தமிழ்நாட்டில் கல்வி பயிலும் மாணவ, மாணவிகளுக்கு தரமான கல்வியை வழங்கவும், உயர்கல்வியில் மாணவ, மாணவிகளின் சேர்க்கை விகிதத்தை அதிகரிக்கவும், அனைத்து குழந்தைகளும் கல்வி பயிலவும் வேண்டும் என்பதை நோக்கமாக கொண்டு காலை உணவு திட்டம், இல்லம் தேடி கல்வி, எண்ணும் எழுத்தும் திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை செயல்படுத்தினார்.

உயர்கல்வியில் மாணவிகளின் சேர்க்கையை அதிகரிக்கும் வகையில்,சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் உயர்கல்வி உறுதி திட்டத்தின்கீழ் அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் (தமிழ் வழியில்) 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வியில் பயிலும் மாணவிகளுக்கு மாதந்தோறும் தலா ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் திட்டத்தினை தொடங்கி வைத்தார்.

அதேபோன்று அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளில் (தமிழ் வழியில்) 6ம் வகுப்பு முதல் 12ம் வகுப்பு வரை பயின்று உயர்கல்வியை பயிலும் மாணவர்களும் பயன்பெறும் வகையில் மாதந்தோறும் தலா ரூ.ஆயிரம் வழங்கும் தமிழ்ப் புதல்வன் என்ற திட்டத்தினை தொடங்கி வைத்தார். இந்த திட்டத்தின்படி மாநிலம் முழுவதும் ஏராளமான மாணவ, மாணவிகள் பயன்பெற்று வருகின்றனர்.

நீலகிரி மாவட்டத்தில், புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் 2022-2023ம் நிதியாண்டில் 650 மாணவிகளும், 2023-2024ம் நிதியாண்டில் 835 மாணவிகளும், 2024-2025ம் நிதியாண்டில் 1,304 மாணவிகளும், 2025-2026ம் நிதி ஆண்டில் (31.10.2025) வரை 1,326 மாணவிகளும் என மொத்தம் 4,115 மாணவிகளும், தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் 2024-2025ம் நிதி ஆண்டில் 1,750 மாணவர்களும், 2025 2026ம் நிதி ஆண்டில் 1,841 மாணவர்களும் என மொத்தம் (31.10.2025) வரை 3,591 மாணவர்களும் பயனடைந்துள்ளனர்.

இத்திட்டத்தின் மூலம் பயனடைந்த ஊட்டி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாணவி ஒருவர் கூறுகையில், "நான் ஊட்டி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் இரண்டாம் ஆண்டு மருத்துவக் கல்வி பயின்று வருகிறேன். எனக்கு புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.ஆயிரம் நிதியுதவி கிடைக்கிறது.

இந்த தொகையானது எங்களது செலவினை நாங்களே பார்த்துக் கொள்ள உதவியாக இருக்கிறது. எங்களுக்கு தேவைப்படும் பட்சத்தில் பெற்றோரால் கொடுக்க முடியாத சூழ்நிலை ஏற்படும்போது இந்த தொகையானது எங்களுக்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது.

உயர்கல்வியினை தொடரும் வகையில் இதுபோன்றதொரு சிறந்த திட்டத்தினை அறிவித்து ஊக்கத்தொகை வழங்கிய தமிழ்நாடு முதல்வருக்கு மனமார்ந்த நன்றி" என்றார்.

இந்த திட்டத்தின் மூலம் பயனடைந்த ஊட்டி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மாணவர் ஒருவர் கூறுகையில், "நான் ஊட்டி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இரண்டாம் ஆண்டு மருத்துவக்கல்வி பயின்று வருகிறேன். எனக்கு தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் மாதம் ரூ.ஆயிரம் நிதியுதவி கிடைக்கிறது.

இதன்மூலம் மற்றவர்களை நாடாமல் எங்களது தேவைகளை நாங்களே பூர்த்தி செய்து கொள்ள முடிகிறது. அரசால் வழங்கப்படும் இந்த ஊக்கத் தொகையானது என்னுடைய சொந்த செலவிற்கு மிகவும் பயனுள்ளதாக உள்ளது. இது போன்றதொரு சிறந்த திட்டத்தினை அறிவித்து, ஊக்கத் தொகையை வழங்கி வரும் தமிழ்நாடு முதல்வருக்கு மனமார்ந்த நன்றி" என்றார்.



மதுரை மாநகர் மாவட்ட முன்னாள் செயலாளரும், முன்னாள் சட்டமன்ற உறுப்பினரும்,பேரறிஞர் அண்ணா விருது பெற்றவருமான சொ.காவேரிமணியம் அவர்களின் 20 ஆம் ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு அவனியாபுரத்தில் உள்ள அவரது இல்லத்தில் அவரது திருவுருவப்படத்திற்கு மாநகர் மாவட்டச் செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ., கழக மாநில தணிக்கைக் குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல் திட்டக்குழு உறுப்பினர் பெ.குழந்தைவேலு ஆகியோர் முன்னிலையில் முன்னாள் அமைச்சர் பொன். முத்துராமலிங்கம் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். உடன் கழக நிர்வாகிகள் பொ.கௌதம் காவேரிமணியம்,காவேரி,சொக்கலிங்கம்,மா.ஜெயராம், அக்ரி கணேசன், முத்துராமலிங்கம், மூவேந்திரன், பி.டி.மணிமாறன், ரவீந்திரன், வைகை பரமன், கருப்பசாமி, ஜீவன் ரமேஷ் குமார், கிருஷ்ணபாண்டி, எஸ்.எஸ்.மாறன், அண்ணாதுரை, ஸ்ரீதர், திராவிட மாரி, சத்தியராஜ் உள்ளிட்ட திரளான கழக நிர்வாகிகள், கழகத்தினர், குடும்பத்தார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.